RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt20318

# வள்ளுவம் கண்ட அரசியல்

## உ. கருப்பத்தேவன் [அ,*]

[அ] ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625021. தமிழ்நாடு, இந்தியா.

# Politics of Valluvam

## U. Karuppathevan [a,*]

[a] Department of Comparative Literature, Madurai Kamaraj Unievrsity, Madurai 625021, Tamil Nadu, India.

* Corresponding Author:
uk.thevar@gmail.com

Received : 09-01-2019
Accepted : 28-05-2020

Check for updates

**ABSTRACT**

The state that Valluvam insists depends on the rights of the people. To abolish slavery, demand good government otherwise to exclude. Valluvam adores good government and good king at the same time abhor the bad king, and throw such a tyrannical king away. Valluvam, which claims to be a superpower, says it will protect it from enemies. The Government and Government rule that Valluvam insists are not in the category of Monarchy, Force and republic Government. Whatever the type, the scepter government is the government that Valluvam insists. The essay for this study is in the context of Valluvam politics.

**Keywords:** Politics, Valluvam, Government, Valluvam politics

## ஆசிரியர் குறிப்பு



**முனைவர் உ. கருப்பத்தேவன்** மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழயற்புலத்திலுள்ள ஒப்பிலக்கியத்துறையில் உதவிப்பேராசிரியராகவும் துறைத்தலைவர் பொறுப்பும் வகித்துவருகிறார். இவர் ஒரு சிறந்த தமிழ் ஆர்வலராகவும் திறனாய்வாளராகவும் ஒப்பியல் அறிஞராகவும் அறியப்படுகிறார். தொடர்ந்து தமிழ் கலை மற்றும் இலக்கியவெளியில் பயணித்துவரும் இவருக்கு நற்றமிழ் ஆசிரியர் விருது, பேராசிரியர்ரத்னா விருது நல்லாசிரியர் விருது தமிழாய்வுச்சுடர் விருது, கவியாய்வுச்சுடர் விருது போன்ற பல்வேறு விருதுகள் தமிழகத்தில் உள்ள கலை இலக்கியப்பரிவு சார்ந்த அமைப்புக்களால் வழங்கப்பட்டுள்ளது. நான்காம் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரியில் இளம் இலக்கியம், முதுகலை மற்றும் ஆய்வியல் நிறைஞர் ஆகிய பட்டப்பேறுகளையும், மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழியற்புலத்தில் திருவாசத்தில் இலக்கிய நலன்கள் என்னும் பொருண்மையில் ஆய்வு செய்து முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலும், ஒப்பியல்

நோக்கில் திராவிட மொழிகளில் இராமாயணங்கள் எனும் பொருண்மையில் பல்கலைக்கழக நிதிநல்கை ஆய்வுக்குழுவில் ஆராய்ச்சி நிதியாக ரூ. 7 இலட்சம் நிதியுதவி பெற்று ஆய்வினை நிறைவு செய்துள்ளார். சங்க இலக்கியம், இடைக்கால இலக்கியம், ஒப்பிலக்கியம் ஆகிய துறைகளில் பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதி வருகிறார். பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கிகரிக்கப்பட்ட ஆய்விதழ்களில் இவரது கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன.


## ஆய்வுச் சுருக்கம்

வள்ளுவம் வலியுறுத்தும் அரசு மக்களின் உரிமை சார்ந்தது அடிமைமுறையை வெறுப்பது. நல்லரசை வேண்டுவது அல்லரசைக் கடிந்து ஒதுக்குவது. நல்லரசனையும் நல்லாட்சியையும் போற்றும் வள்ளுவம், அல்லரசனை ஒழிகவெனத் தூற்றுவதோடு, கடிந்து கொடுங்கோல் மன்னனைப் புறம் தள்ளுகின்றது. வல்லரசு வேண்டுமெனக் கூறும் வள்ளுவம் அது பகைவனிடமிருந்து குடிமக்களைப் பாதுகாக்கவே என்கின்றது. ஆயினும் மெல்லரசு வேண்டும் என்பதே வள்ளுவத்தின் தலையாய கொள்கையாகும். வள்ளுவம் வலியுறுத்தும் அரசும் அரசாட்சியும் முடியரசு, குடியரசு, படையரசு என்னும் வகைமைகளுக்கு உட்பட்டதன்று வகை எதுவாயினும் செங்கோல் அரசுதான் வள்ளுவம் வலியுறுத்தும் நாட்டரசு ஆகும். “வள்ளுவம் கண்ட அரசியல்" என்னும் பொருளில் இவ்ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.


## மன்னன் - தலைவன்

மன்னனே நாட்டின் தனிப்பெருந்தலைவன் என்பது வள்ளுவச் சிந்தனை அன்று நாட்டில் குடிமக்களுள் சிறந்த தலைவர்களும் மூதாதையர்களும் உண்டு. அன்னவர்களின் அறிவுரைகளையும் சிந்தனைகளையும் தழுவியே மன்னன் நாட்டினை ஆட்சி செய்ய வேண்டும். அரசு இயங்க வேண்டும். இல்லையெனின் மன்னவன் அழிவான் அரசும்கெடும்.

“ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்தும் கெடும்" (குறள்.899)

மன்னனுக்கு அறிவுரையும் அறவுரையும் கூறும் வள்ளுவம், செவிகைப்பச் சொற்பொறுக்கும் மன்னவனே பண்புடையவன் என்கின்றது. அம்மன்னனுக்கு வெற்றியைத் தருவது வேலன்று செங்கோல் என நினைவுபடுத்துகின்றது. நாட்டை ஆளும் மன்னவனுக்கு இடித்துரைத்துத் தவறுகளைச் சுட்டிக் கண்டிக்கும் நண்பர்களையே (அமைச்சர்கள்) வேண்டுகின்றது. மன்னவனின் புகழ்கூறும், துதிபாடும் அன்பர்களைச் சாடுகின்றது.

மனிதனின் உடல்வன்மையையும் உரத்தையும் (படைவீரர்கள்) நம்பி மன்னவன் அரசாண்ட பண்டைய சமுதாயச் சூழலில், வேலினால் மட்டுமே வெற்றியை அறுவடை செய்துவிடலாம் என மன்னவன் நம்பியிருந்த அன்றைய அரசியலில், மன்னனின் செங்கோல்

ஆட்சி மக்களின் ஆதரவுடன் தான் இருக்க வேண்டுமென வள்ளுவம் வலியுறுத்தியது அன்றையச் சூழலில் மகத்தான அரசியல் புரட்சியாகும். இதனை வள்ளுவம்,

"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்" (குறள்.546)

என்கின்றது. இது மக்களாட்சித் தத்துவத்தின் உயரிய சிந்தனையாகும் (Rajaram, 2009; Rajaram, 2015; Chakravarthy Nayenar, 1947; Viswanatham, 1954; Subramaniyadass, 1957)

.

## கல்வி - மன்னனுக்கு வேண்டும்

அரசியலுக்குக் கல்வி வேண்டும் என்னும் சிந்தனை முதன்முதலில் திருக்குறளில்தான் காணப்படுகின்றது. இதனை அ.ஆறுமுகம் திருக்குறளில் கல்வி என்னும் ஆய்வுக்கட்டுரையில், "அடிப்படைக் கல்வியுடன் ஆட்சியைத் திறம்பட நடத்துவதற்குரிய கல்வியையும் மன்னன் பெற்றிருக்க வேண்டும். தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும் நிலன் ஆள்பவர்க்கு இன்றியமையாதவை. தனித்தனியே கற்றல் குறித்து வள்ளுவச் சிந்தனையை நோக்கும்போது அரசுப்பணிக்குரியனவற்றைக் கற்றறியும் கல்வி தனியே இருந்திருக்க வேண்டும். ஆலோசனை கூறும் அமைச்சன் வன்கண், குடிகாத்தல், கற்றறிதல் என ஆள்வினையுடன் சிறப்புப்பெற்று விளங்கவேண்டும்" எனக் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு" (குறள்.383)

என்னும் வள்ளுவச் சிந்தனை ஆட்சியாளர்களுக்கு என்றும் உரியது. ஒற்றும் உரைசான்ற அரசியல் நூலும் மன்னவனுக்கு இரு கண்களாக இருக்கவேண்டும்.

"ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்" (குறள்.581)

இதனால் மன்னவனுக்கு அரசியல் குறித்த சிறப்புக்கல்வி வேண்டும் என்பதை அறியலாம். அரசனை நல்லாட்சிக்கு ஆற்றுப்படுத்தும் கடமையும் பொறுப்பும் அறிவு சான்ற அமைச்சனுக்கே உரியது. இதனால் தான் வள்ளுவம் அமைச்சனுக்கு,

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு" (குறள்.632)

என அறிவுரை கூறுகின்றது. அமைச்சன் என்பவன் கூடுதல் அறிவுடையவனாக இருக்க வேண்டும். இதனால்தான் அவன் கூடுதல் மதிநுட்பத்தைப் பெறுகின்றான். நிறை நூல்களைக் கற்றால்தான் அமைச்சனுக்கு இந்தக் கூடுதல் மதிநுட்பம் கிடைக்கும்.

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை" (குறள்.636)

அரசியலில் அமைச்சர்களுக்கு அடுத்த நிலையில் மன்னர்களுக்குத் துணை நிற்பவர்கள் தூதுவர்களே. தூதர்கள் அறிவும் உருவாராய்ந்த கல்வியும் உடையவர்களாக இருக்க வேண்டும். தூதுவர்களால் பிறநாட்டுப் பகைமை தவிர்க்கப்படுகின்றது. போர்தடுக்கப்படுகின்றது. இதனை வள்ளுவம்,

"அறிவுரு ஆராய்ந்த கல்வி இம்மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு" (குறள்.684)

என வலியுறுத்துகின்றது. நூலாருள் நூல் வல்லவராகவும், கற்றுக் கண்ணஞ்சி செலச் சொல்லிக் காலத்தால் தக்கது அறிபவராகவும் தூதர்கள் விளங்கவேண்டும் என்பதே வள்ளுவச் சிந்தனையாகும் (Paloore Kannapa Mudaliar, 1956; Annamalai; 1961; Srinivasan; 1964; Kembu Arumugam; 1969; Alalasundaram; 1969; Paramasivanantham; 1969).

## மக்கள் தொடர்பில் சொல்லாற்றலும் பேச்சுவன்மையும்

சொல்லாற்றல் மிக்க பேச்சுவன்மை என்பது எல்லார்க்கும் பொதுவாக வேண்டப்படுவதே, எனினும் "மக்களோடு தொடர்பு கொண்டு வாழ்வார்க்கும் இச்சொல் லாற்றல் மிகமிக இன்றியமையாதது. அரசின் பணிகளையும் திட்டங்களையும் மக்களிடம் தெளிவாக எடுத்துரைக்கவும் ஆட்சியாளர்களை நெறிப்படுத்தவும், அதுபோன்ற பணிகளைத் திறமையாக நிறைவேற்றவும் சொல்லாற்றல் மிகமிக இன்றியமையாதது. ஆதலால்தான் வள்ளுவம் பேரளவும் பேச்சாற்றல் மிக்கவர்களை வரவேற்கின்றது. அமைச்சியலில் சொல்வன்மை, அவை அறிதல், அவை அஞ்சாமை என்னும் அதிகாரங்கள் வள்ளுவத்தில் இடம் பெற்றிருப்பினும் அரசியலுக்குச் சொல்லாற்றல் மிக்கவர்கள் தேவை எனக் கூறும் திருக்குறள் ஆய்வாளர், வள்ளுவத்தின் இச்சிந்தனைகள் சீன அரசியல் தத்துவஞானி கன்பூசியசும் இதனை வலியுறுத்தியிருப்பதைத் தக்க சான்றுகளுடன் எடுத்துக் காட்டியுள்ளார்.

## மன்னன் கடவுள் இல்லை

தமிழகத்தில் முடியாட்சியின் தலைவனாக மன்னன் இருந்திருக்கின்றான். ஆயினும் மன்னனைக் கடவுள் வழிவந்தவன் என்னும் கொள்கை ஏற்கப்படவில்லை. மக்கள் மன்னனின் ஆணைகளையும் கட்டளைகளையும் கடவுளின் ஆணைகள் என ஏற்கவில்லை. உயர்ந்தவர்கள் துணிச்சலுடன் மன்னனின் ஆணைகளை எதிர்த்து நல்வழிப்படுத்தும் உரிமையைக் கொண்டிருந்தனர் அல்லது அவ்வாறு விளங்க வேண்டுமென எதிர்பார்த் துள்ளனர் என்பதற்கு வள்ளுவத்தில் சான்றுகள் உள்ளன.

"இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்" (குறள்.447)

"இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும்" (குறள்.448)

என்னும் குறட்பாக்கள் இதற்குச் சான்றுகளாகும். முடியாட்சி நடைபெற்ற தமிழகத்தில் மன்னனைக் காட்டிலும் அறிவிலும் சிந்தனையிலும் பண்பிலும் மேம்பட்டவராகப் பெரியோர் இருந்துள்ளனர். அன்றைய அரசியலில் அவர்களின் பங்களிப்பும் பெரிதாக இருந்துள்ளது. இதனை,

"தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை" (குறள்.444)

என்னும் குறளால் அறியலாம். தம்மின் பெரியார் என உயர்ந்தோரைக் குறித்துவரும் தொடர் இதனை உறுதிப்படுத்துகின்றது. பழந்தமிழர் அரசியலில் உயர்ந்தோர்க்குரிய மதிப்புரிமை மிகுதி. அரசியல் தொடர்பில் உயர்ந்தோர் இன்றியமையாதவராகக் கருதப்பட்டனர் என்பதை,

"பல்லார் பகைகொளின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்" (குறள்.450)

என்னும் குறள் தெளிவுபடுத்துகின்றது. வள்ளுவம் உயர்ந்தோரின் அரசியல் தொடர்பான பணிகளை

"உற்றநோய் நீக்கி உறாமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்" (குறள்.445)

என்னும் குறளும் சூழ்வார் (குறள்.444), இடிக்கும் துணையாரை (குறள்.447), இடிப்பாரை (குறள்.448) என்னும் குறட்பாக்கள் குறிப்பிட்ட ஆட்சிகளையும் உய்த்துணர வைக்கின்றன. மன்னனுக்கு வரும் துன்பங்களை நீக்குதல், அவை வாராது தடுத்துக்காத்தல், காலத்திற்கேற்ற ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் மன்னனுக்குக் கூறி நல்லாற்றுப் படுத்துதல், மன்னன் தவறான வழிகளில் செல்லும்போது அவனை இடித்துரைத்துத் திருத்துதல் ஆகியன உயர்ந்தோரின் பணிகளாக அறிய முடிகின்றன. இவற்றையெல்லாம் உற்றுநோக்கும்போது அரசியலில் மன்னனுக்குத் துணைநின்று நல்லாற்றுப்படுத்தவும், மன்னனைக் கட்டுப்படுத்தும் தகுதியும் உரிமையும் உடையவர்களாக வள்ளுவம் கூறும் உயர்ந்தோர்கள் இருந்ததை அறியலாம் (Paramasivananantham, 1969; Murugarathinam, 1975; Perumal, 1974; Mohanarasu, 2007; Pakirisankar, 1973; Ramashanmugam, 1971; Kundrakudi adigalar, 1972; Venkataramaiah, 1970).

## பொருட்பாலில் வள்ளுவம் காட்டும் அரசியல்

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பால்களைக் கொண்ட திருக்குறளில் பொருட்பாலில்தான் எழுபது அதிகாரங்கள் அடங்கியுள்ளன. இதிலிருந்தே வள்ளுவம் அரசியலை அனைத்திலும் சிறந்ததாகவும், எல்லா நன்மைகளுக்கும் அடிப்படையாகவும் கருதியதை அறியலாம். மழை பொய்த்துவிட்டால் உலக உயிர்கள் வாழ இயலாது. சிறந்த ஆட்சியில்லாவிட்டால் குடிமக்களின் குறை நீங்காது. சமயம் வளர்வதற்கும் ஆட்சியே இன்றியமையாதது என்பது வள்ளுவச் சிந்தனையாகும். எம்.நாராயணவேலுப்பிள்ளை, "சமயம் நிலைபெற்று மக்கள் அதனைக் கடைப்பிடிக்க வேண்டுமானால் அரசியல் நிலையுள்ளதாக இருக்கவேண்டும். அரசியலின் ஆதரவால்தான்

எந்தநாடும் செழிப்படைய முடியும். நாட்டில் கைத்தொழில்களும் கலைகளும் நன்றாக வளர்ந்து எல்லாரும் இன்புறமுடியும். உணவுப்பஞ்சம் ஒழிந்து மக்கள் அனைவரும் உண்டு மகிழ்ந்து, ஒழுக்கங்கெடாமல் வாழமுடியும். தமிழர்கள் அரசாட்சியை உயிராகக் கருதுகின்றவர்கள். இதுவே திருவள்ளுவர் கருத்து" எனக் கூறுவது ஓர்ந்து சிந்திக்கத்தக்கதாகும்.

## அரசாட்சிக்கு நாடு என்னும் நிலப்பரப்பு

இன்றைய அரசுக்கு நாடு என்னும் நிலவரை (நிலப்பரப்பு) மிகவும் இன்றியமை யாதது என்பர். வள்ளுவம் அரசியலின் சிறப்பினைப் பேசும் இறைமாட்சி என்னும் அதிகாரத்தின் முதற்குறளில்

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள்.381)

என மன்னன் உடைமைகள் ஆறினைத் தொகுத்துக் கூறுகின்றது. இவற்றுள் குடி ஓர் உறுப்பாக இடம்பெறினும் நாடு இடம்பெறவில்லை. ஆயினும் பொருட்பாலில் நாடு (அதிகாரம் 74) எனத் தனியே ஒரு அதிகாரம் உள்ளது. குறளின் உரையாசிரியராகிய பரிமேலழகர் குடி என்பது அதனைக்கொண்ட நாடு என விளக்கம் தந்துள்ளார். எனினும் குடியும் நாடும் ஒன்றல்ல. வள்ளுவம் குடிமை என்னும் அதிகாரம் தொடங்கி பதின்மூன்று அதிகாரங்களில் குடிமக்கள் இயல்புகளைப் பேசுவதாக வள்ளுவ உரையாசிரியர்கள் பலரும் பேசுகின்றனர். வள்ளுவம் படைகுடி என்னும் குறளில் மன்னனுக்குரிய உடைமைகளைக் கூறுகின்றது. ஆனால் நாடு மன்னனுக்குரிய உடைமைப் பொருள் இல்லை. ஆராய்ச்சிப் பார்வையில் நாடு என்பது அரசியலில் ஓர் உறுப்பாகும். வடமொழி மரபில் அரசுக்கு ஏழு உறுப்புக்கள் என்பதை ஏற்றுக்கொண்டால் மன்னனும் ஓர் உறுப்பாகின்றான். வள்ளுவ அரசியலில் நாடாளும் மன்னவன் நடுவன் ஆவான். அவன் ஓர் உடைமையும் உறுப்பும் அல்லன்.

"இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்" (குறள்.547)

என வள்ளுவம் மன்னன் காக்கும் வையகம் உண்டு எனக்கூறுகின்றது. அது மன்னன் வாழும் நாடாக இருத்தல் வேண்டும். தனக்குரிய நாட்டையே மன்னன் தானாளுகின்றான். வள்ளுவம்,

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்" (குறள்.553)

என மன்னன் முறைசெய்யாதபோது தனக்குரிய நாட்டினை இழப்பான் எனக்கூறுகிறது. மேலே சுட்டிக்காட்டிய இறைகாக்கும், நாடொறும் என்னும் குறட்பாக்களை நோக்கும்போது மன்னனும் ஆட்சியும் நீங்கிய நிலப்பரப்பையே நாடு குறிக்கின்றது. மன்னனுக்கும் நாட்டிற்கும் உள்ள உறவுகள்,

"மீக்கூறும் மன்னன் நிலம்" (குறள்.386)

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்" (குறள்.544)

"இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு" (குறள்.545)

என்னும் குறட்பாக்களில் தெளிவுபடுத்தப் பெற்றுள்ளன. நாடு என்பது அரசினைக் கொண்டது. ஊர் என்பது அரசு இல்லாதது. ஆயினும் நாடும் ஊரும் மருதநிலமாகும். அது வேளாண்மை விளைச்சலைக் கொண்டது. காடு என்பது விளையுள் அற்றது. அக்காட்டைக் கொன்றுதான் நாடாக்க வேண்டும்.

## அரசியலின் கொள்கைகளும் போக்குகளும்

அரசு என்னும் அமைப்பிற்கு அயல்நாட்டு உறவுக்கொள்கை உண்டு. அக்கொள்கையை உருவாக்குபவர் யார்? என்று வள்ளுவம் வெளிப்படையாகப் பேசவில்லை. நடைமுறை அரசியலமைப்பில் அரசின் தலைவராக இருப்பவர், சட்டமன்றம், நீதிமன்றம், கட்சிகள் ஆகியன நாட்டுறவுக் கொள்கைகளை உருவாக்குகின்றன. வள்ளுவத்தில் சட்டமன்றங்கள், நீதிமன்றங்கள் பற்றிய குறிப்புக்கள் இல்லை. அரசியல் கட்சிகள் இல்லை. சிலப்பதிகாரம் கூறும் ஐம்பெருங்குழு, எண்பேராயம் முதலான அமைப்புக்களும் இல்லை. வள்ளுவத்தில் மன்னனே இவையனைத்தும் அரசின் தலைவன், ஆட்சியின் தலைவன், நீதியின் தலைவன் என்ற அனைத்திற்கும் மன்னனே தலைவன். நாட்டுக்கு வேண்டிய அனைத்துக் கொள்கைகளையும் மன்னவனே இயற்றுகின்றான். இதனை வள்ளுவம்,

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்" குறள்.543)

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" (குறள்.385)

எனக் கூறுவதால் அறியலாம்.

அறத்திற்கு ஆதியாய் நிற்பவன், இயற்றுபவன், கொள்கை வகுப்போன் என்றே வள்ளுவம் மன்னனை உயர்த்திப் பேசுகின்றது. இந்நிலையில் நாட்டுறவுக் கொள்கைகளை வகுப்போனாகவும் மன்னனே இருந்திருக்க வேண்டும்.

வள்ளுவம் அரசிடை நட்பைவிட அரசரிடை நட்பு வேண்டும் என்பதையே அழுத்தமாகப் பேசுகின்றது. ஆய்வாளர், "திருவள்ளுவர் ஒருநாடு என்பது ஓர் எல்லைக்கு உட்பட்டதாக இருக்கவேண்டுமென எங்குமே கூறவில்லை. எனினும் காட்டரண், மலையரண் போன்ற புற அரண்களை நாட்டின் உறுப்புக்களாகக் கூறுவதால் எந்நாடும் ஓர் எல்லைக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என்பதில் திருவள்ளுவர் உடன்பாடுடையவர்" என்பர். ஆயினும் ஓர் எல்லைக்கு உட்பட்டிருந்த நிலப்பரப்பைக் கொண்டிருந்தால் மட்டுமே ஒரு

நிலம் நாடாகிவிடாது. அங்கு இயற்கைச் செல்வம் நிறைந்து இயல்பாக வளம் கொழிக்க வேண்டுமென வள்ளுவம் எதிர்நோக்குகின்றது.

“கேட்டறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை” (குறள்.786)

“இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரனும் நாட்டிற்கு உறுப்பு” (குறள்.737)

“நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு” (குறள்.739)

என்னும் குறட்பாக்களின் கருத்துரைகளின்வழி இதனை அறியலாம்.

## மன்னனின் பண்புகளும் பணிகளும்

ஒரு நாட்டை ஆளும் மன்னன் உடைமைகள் ஆறினையும் பெற்றிருப்பினும், அவன் தம்மளவில் பண்பாளனாகவும் இருக்கவேண்டும். அஞ்சாமை, அல்லல் நீக்கல், அறிவுடைமை, அறன் இழுக்காமை, ஆள்வினை உடைமை, இடுக்கண் அழியாமை, இன்சொல் உடைமை, ஈகையுடைமை, ஊக்கம் உடைமை, கடுஞ்சொல்கூறாமை, காட்சிக்கு எளிமை, மடியின்மை, இழுக்காமானம் உடைமை ஆகிய பண்புகளின் உறைவிடமாகவும் மன்னன் இருக்க வேண்டும் என மன்னனின் பண்புகளை வள்ளுவம் வலியுறுத்தியுள்ளது.

பண்புகளின் முழுமையால் ஒரு குறிக்கோளுடைய மன்னனைப் படைத்துக் காட்டுவதைப்போலவே, மக்களுக்குத் தொண்டாற்றும் நிலையிலும் ஒரு குறிக்கோள் மன்னனையே வள்ளுவம் படைத்துக் காட்டுகின்றது. நாட்டில் வாழும் குடிமக்களின் நலம் காப்பதற்கு மன்னனிடம் இருக்க வேண்டிய பண்புகள் தூண்டுதல் கருவிகள் ஆகும் மன்னன் செய்யும் மக்கட்தொண்டும் பணிகளும் அவனுக்கு வரையறுக்கப்படும் குறிக்கோள்களின் இயக்கநிலைகள் ஆகும். குறிக்கோள் என்னும் விளக்கின் ஒளியாக விளங்கும் மன்னனின் கடமைகளுள் தலையாயது காவற்பணியாகும். நாட்டையும் நாட்டு மக்களையும் கடமை உணர்வுடன் காப்பதாலேயே மன்னன் “காவலன்" எனக் கண்ணியமாக அழைக்கப்படுகின்றான்.

“இறைகாக்கும் வையகம் எல்லாம்” (குறள்.547)

“காவலன் காவான் எனின்” (குறள்.560)

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்” (குறள்.388)

என்னும் வள்ளுவத்தின் தொடர்கள் மன்னன் மக்களைப் பாதுகாக்கும் கடமை சார்ந்த காவற்பணியை எடுத்துரைக்கின்றன.

## அரசுப் பணியாளர்களைத் தேர்வு செய்தல்

அரசாட்சி செய்யும் மன்னன் தன்கீழ்ப் பணியாற்றும் பொறுப்புமிக்க அலுவலர்களைத் தேர்வு செய்யும்போது எச்சரிக்கையாக இருக்கவேண்டும் அது அறிவார்ந்த, பொறுப்புணர்ந்த தேர்வாக இருக்க வேண்டும். கண்ணோடாது, தாட்சண்யம், கருணைகாட்டாது கடமையுணர்ந்த தேர்வாக இருக்க வேண்டும் என்பதை வள்ளுவம்,

“காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்” (குறள்.507)

என வலியுறுத்துகின்றது. கண்ணோட்டம் கண்ணிற்கு அழகு கண்ணோட்டம் இல்லாத கண்கள் புண்கள் என வள்ளுவம் வலியுறுத்தினும் அக்கண்ணோட்டம் அளவோடு இருக்கவேண்டும் என்பதே வள்ளுவச் சிந்தனையாகும். ஒருவன் கொலைக்குற்றம் போன்று கொடிய குற்றத்தைச் செய்தால் அக்குற்றத்திற்கு உரியவனைத் தூக்கிலிட்டுத் தண்டிப்பது நாடாள்வோன் கடமையென வள்ளுவம் வலியுறுத்துகின்றது.

“கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்” (குறள்.550)

என்கின்றது வள்ளுவம்.

## அரசின் நிர்வாகக் கொள்கை

வள்ளுவத்தின் பொருட்பாலில் காணப்பெறும் உள்நாட்டு நிர்வாகக் கொள்கை அறநெறி பிறழாதது. ஏழைகள் அழுத கண்ணீர் அரசாட்சியையே வீழ்த்திவிடும் ஆற்றலுடையது. மன்னன் ஏழைகளின் அழுங்கண்ணீர்க்கு ஆளாகாமல், மக்கள் நல்வாழ்வு கருதி செங்கோலாட்சி செய்யவேண்டும். இதுவே வள்ளுவம் வலியுறுத்தும் அரசின் நிர்வாகக் கொள்கையாகும்.

“அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை” (குறள்.555)

இதனை வள்ளுவத்தின் உள்நாட்டு நிர்வாகக் கொள்கையாகக் கருதலாம். மன்னன், அண்டைநாடுகளுடன் வீண்பகை கொள்ளாமல், மக்களின் அமைதியான நல்வாழ்வுக்காக அண்டை நாட்டு மன்னர்களுடன் நல்லுறவு கொண்டிருக்க வேண்டும். வள்ளுவம் இதனை,

“இகலென்ப எல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்” (குறள்.851)

“இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவலில்லாத்
தாவில் விளக்கம் தரும்” (குறள்.853)

“இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்” (குறள்.854)

எனப் பல நிலைகளில் வலியுறுத்திக் கூறுகின்றது. இகல் என்பதற்குப் பகை, மாறுபாடு எனப் பொருள் கொள்ளலாம். ஆதலால் அண்டை நாடுகள் மற்றும் வெளிநாடுகளுடன் வீண்பகையை வளர்த்துக் கொள்ளாமல் நல்லுறவுடன் அமைதியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே வள்ளுவம் வலியுறுத்தும் அரசின் நிர்வாகக் கொள்கையாகும்.

## வள்ளுவம் காட்டும் அரசியலின் தனித்தன்மைகள்

அன்றைய சூழலில் தமிழ்நாட்டில் நடைபெற்ற ஆட்சிமுறையை நன்கு விளக்கும் நூல் வள்ளுவம் ஒன்றே ஆகும். திருக்குறளில் பொருட்பாலில் இருபத்தைந்து அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ள அரசியல் கருத்துக்கள் மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாத ஒழுக்கங்கள் அனைத்தும் நாடாளும் மன்னனின் செங்கோலால் அடையப் பெறுவன எனக் கூறுகின்றன.

மன்னனும் அமைச்சர்களும் தத்தம் பொறுப்புக்களையும் கடமைகளையும் உணர்ந்து செயலாற்ற வேண்டுமென வள்ளுவம் வலியுறுத்துகின்றது. வள்ளுவம் கூறும் அரசியலுக்கு அடிப்படை அறன் அல்லது தருமமாகும். பரந்த மனமுடையார்க்கு உலகமே ஒரு குடும்பமாகும். இவ்வாறு அன்புகாட்டுவதற்கு ஓர் ஒழுங்கமைதி வேண்டும். அது மன்னனும் அமைச்சர்களும் வரையறுக்கும் அரசியல் கோட்பாட்டில் உள்ளதாக வள்ளுவம் பேசுகின்றது. அரசனும் அரசும் இல்லாமல் மக்கள் உறுதிப்பொருள்களை அடைய முடியாது என்பதே வள்ளுவர் கூறும் அரசியல் சிந்தனையாகும். இக்கருத்து பிளேட்டோ, போன்ற மேலைநாட்டறிஞர்களின் சிந்தனைகளை ஒத்துள்ளது. “திருக்குறளில் கௌடில்யரின் அர்த்தசாத்திரம் என்னும் அரசியல் பொருள்நூலின் கொள்கைகளும் பின்பற்றப் பெற்றுள்ளன. கௌடில்யர் “கள்” உண்பதை எதிர்ப்பதையும், அரசியல் உறுப்புக்கள் ஏழு எனக் கூறுவதையும் சுட்டிக்காட்டி ஆய்வாளர் பலரும் இதனை வள்ளுவர் பின்பற்றுவதாகக் கூறுகின்றனர். ஒற்றர், ஒற்றாடல் ஆகிய திருவள்ளுவரின் கொள்கைகள் கௌடில்யர் கொள்கைகளே" என்பர். சாதி, சமய வேறுபாடுகளுக்கு இடந்தராமல் சமூக ஒற்றுமையைப் பேணுவதே வள்ளுவரின் அரசியல் கொள்கையாகும். எனினும் டி.சி.ஸ்ரீநிவாஸய்யங்கார், “தனியே வள்ளுவர் அரசியல் செய்திகளைக் கூறவில்லை. எல்லோர்க்கும் பொதுவாகிய அறம், பொருள், இன்பங்களைக் கூறத் தொடங்கிய வள்ளுவர் அவற்றைச் சொல்லும் முறையில் அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும் சிறப்புடைய பொருள், அரச நீதியால் நிலைபெற வேண்டுமாதலின் அரசியல் செய்திகளை இயைபு பற்றித் தேவையான அளவிற்குத் திருவள்ளுவர் விளக்கிக் கூறுவதாகக் “நல்ல அரசும் பொருளாதாரச் சமத்துவமும் நாட்டில் நிலைபெற்றாலொழிய மக்கள் ஒழுக்கமும் உயர்வும் பெற்று இன்பவாழ்வை எட்ட இயலாது. அரசியல் அடிக்கடி மாறக்கூடிய தன்மையுடையது. திருவள்ளுவர் அதில் கருத்தைச் செலுத்தாமல் என்றென்றும் மாறாமல் நிற்கும் பொது நெறிகளையே போதிக்கின்றார். ஆயினும் அரசியல் அமைப்புக்குத் திருவள்ளுவரின் பொருட்பால் நல்லதொரு வழிகாட்டி. மன்னவனைக் கடவுள் என நம்பிய காலத்தில் மன்னனுக்கே அறிவு புகட்டிப் புரட்சி செய்தவர் திருவள்ளுவர். அரசியல் வேறு மதம் வேறு.

நிலவளம், தொழில்வளம், அறிவு வளம் ஆகிய மூன்றுடன் அனைத்து மக்களுக்கும் பொதுவான செல்வம் என்ற நிலையை உடைய நாடு நல்ல நிலையை அடையும் என்பது வள்ளுவத்தின் தீர்ப்பாகும்" (பரணி, திருவள்ளுவர் ஒரு புரட்சிக்காரர், கஸ்தூரி பதிப்பகம், திருச்சி,1954, ப.96) என வள்ளுவத்தின் அரசியல் சிந்தனைகளை எடுத்துக்காட்டியுள்ளார்.

வள்ளுவர் கண்ட நாடும் காமமும் என்ற நூலில் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், இன்றைய காலகட்டத்தில் அரசின் வெளிநாட்டுக் கொள்கை எனக் கூறப்படுவது வள்ளுவத்தில் உள்ளது என்கின்றார். அவர்,

“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு” (குறள்.788)

என்னும் குறளின் கருத்து இருநாடுகளின் நட்பு, உள்ளம் ஒத்த இருவரின் நட்புப் போன்றது என்கின்றார் அவர்,

“படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு” (குறள்.381)

என்னும் குறளுக்கு படை என்பது போர்ப்படை, குடி என்பது மக்கள் கூழ் என்பது பொருள், அமைச்சு என்பது அமைச்சர்கள், நட்பு என்பது நட்பரசர்கள், அரண் என்பது இயற்கைக்காவல் என்னும் தெளிவான விளக்கங்களைக் கொடுத்துள்ளார். திருவள்ளுவர் அரசியல் சிந்தனைகளை மன்னன்மீது ஏற்றிக் கூறுவதற்குக் காரணம் அவர் மன்னராட்சிக் காலத்தில் வாழ்ந்ததே. இறையாண்மை என்னும் நிலையில் வள்ளுவம் அரசியல் சிந்தனைகளை மன்னன்மீது ஏற்றிக் கூறுகின்றது. இறையாண்மை என்பது அரசியலமைப்பின் அடிப்படையான இறைமை என்னும் பொருளுடையது. இந்த இறைமையைக் கொண்ட அரசியலே தனி அரசியல் ஏனைய அரசியல் அடிமை அரசியலாகும். மன்னன் ஆளும் நாட்டில் இந்த இறையாண்மைக் கொள்கை மன்னனிடமே உள்ளது. இதனால்தான் வள்ளுவம் அரசியல் சிந்தனைகளை மன்னனைச் சார்த்தி விளங்குகின்றது.

## வள்ளுவம் கண்ட நாடு

வள்ளுவம் கண்ட நாடு, மக்களின் நலவாழ்வினைப் பேசுவதாகும். வள்ளுவம் குறிப்பிடும் தக்கார் எனப்படுவோர் சிறந்த தேசத்தொண்டர்கள் ஆவர். நாட்டில் எந்தத்தொழில் செய்வோரும் ஒருவர்மீது ஒருவர் பொறாமையோ இழிவான மனப்பான்மையோ கொள்ளாமல் ஒற்றுமையுடன் வாழவேண்டும். என்பதே வள்ளுவர் கண்ட நாட்டின் இயல்பாகும். தனக்கு வேண்டியதைத் தானே பெற்றிருக்கும் தன்னிறைவு கொண்டதாகவும், இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் குன்றாததாகவும் அப்பொருட்களை உற்பத்தி செய்யும் திறனுடைய மக்களைக் கொண்டதாகவும் நாடு இருக்கவேண்டும் என்பர்.

“மக்களினம் ஒத்துவாழ அரசியலமைப்பு மிகமிக இன்றியமையாதது. மன்னன் பிறப்புரிமையாலும் பிற முறைமையாலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் அவன்

இறைமாட்சி அதிகாரத்தில் கூறப்பெற்றுள்ள சிறப்பியல்புகளைப் பெற்றிருக்க வேண்டும்" என்பர்.

வள்ளுவத்தின் அரசியல் எதிர்காலக் குறிக்கோளும் நிகழ்கால நடப்பும் கொண்டது. உயர்ந்த சிந்தனையும் உலகப்பொதுமை நோக்கும் கொண்டது. பிறநாட்டு நட்பும் தன்னாட்டுப் படைப்பெருக்கமும் வள்ளுவ அரசியலின் வெளிநாட்டுக் கொள்கையாகும். மக்களிடையே ஒற்றுமையைப் பேணிக்காப்பதே அரசின் முக்கியக் கடமையாகும். வள்ளுவம் குறித்து இதுவரை வெளியான அரசியல் ஆய்வுகள் பிறநாடுகளுடன் நட்பு, மக்களிடையே ஒழுக்கத்தையும் ஒற்றுமையையும் பேணிக்காப்பது அரசின் கடமை என்பதையே கூறுகின்றன. நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதும் பெருக்குவதும் மன்னனின் முக்கியப் பொறுப்பு ஆகும்.

## கோனாட்சியில் குடியாட்சி கண்ட வள்ளுவம்

வடமொழியின் அரசியல் மற்றும் தத்துவம் சார்ந்த நூல்களில் அறம், பொருள், இன்பம், வீடு என்பன மக்கள் அடைய வேண்டிய உறுதிப்பொருள்கள் எனக் கூறப்பெற்றுள்ளன. இவற்றுள் முதல் மூன்று பொருள்களையும் அறிந்து ஆற்றி துய்த்தால் தானாகவே நான்காவதாகிய வீடுபேற்றை அடையாளம் என வடமொழி நூல்கள் வலியுறுத்துகின்றன. ஆனால் வள்ளுவம் இதிலிருந்து மாறுபடுகின்றது. மன்னனது ஆட்சித்திறனே இந்த உறுதிப்பொருள்களை அடையச் செய்யும் என்பது வள்ளுவத்தின் கொள்கையாகும். வள்ளுவம் வகுக்கும் அரசியலுக்கு அறனே அடிப்படையாகும். அறநூல்கள் பல இருப்பினும் வள்ளுவமே அரசியலுக்கும் அறத்திற்கும் பொருளுக்கும் இன்பத்திற்குமான நேரடித் தொடர்பினை எடுத்துக்காட்டும் நூலாகும்.

மன்னனின் நல்லாட்சிக்கு உட்பட்ட நாட்டில், மக்களுக்கு முதன்மையான தேவை நல்வாழ்க்கையாகும். அந்த நல்வாழ்க்கை பொருட்செல்வப் பெருக்கம், பெருக்கிய செல்வத்தை முறையாகச் செலவு செய்தல் என்பனவற்றால் அமையும். நல்வாழ்வு என்பது ஒழுக்கசீலர்களுக்கு மட்டுமே கிடைக்கும். இதனால் வள்ளுவம் ஒழுக்கத்தை உயரியதாகப் பேசுகின்றது. அரசியலின் தோற்றம் குறித்து வள்ளுவம் ஆராயவில்லை. முறையாக நிறுவப்பெற்ற ஓர் அரசாங்கத்தையும், ஒழுக்கத்துடன் ஆற்றலைக் கொண்ட மன்னனையும், அம்மன்னனுக்குரிய இறைமாட்சியையும் வள்ளுவம் பேசுகின்றது. வள்ளுவம் கண்ட ஆட்சி கோனாட்சியாயினும் அதில் மக்களின் விருப்பம் தலைமையானதாகக் கொள்ளப்படுகின்றது. “மன்னனின்றி மக்கள் உறுதிப்பொருள்களை அடையமாட்டார்கள் எனக்கூறிய பிளேட்டோ, அரிஸ்டாடில் என்னும் அரசியல் ஞானிகளின் கொள்கைகளும், திருவள்ளுவர் வகுத்த அரசியல் தத்துவங்களும் ஒன்றானதாகும் என்பார் வி.ஆர்.ஆர்.தீட்சிதர் என்ற திருக்குறள் ஆய்வாளர்" அழுத்தமாகப் பதிவு செய்துள்ளனர்.

ஒரு நாட்டில் வாழும் மக்களது இன்பதுன்பங்களுக்கு அந்நாட்ட மன்னனே காரணமாகயிருக்கின்றான். மன்னனால் மக்களுக்கு அளிக்கப்படும் இன்பதுன்பங்களுக்கு

அம்மன்னன் கற்றுணர்ந்த அரசியல் நூல்களே காரணமாகும். இதனால் மன்னனின் தகுதிகள் அரசியலில் பேசப்படுகின்றன. அரிஸ்டாடில் என்னும் கிரேக்க அரசியல் ஞானி எழுதிய அறிவுநூல் முதலான அரசியல் நூல்களில் சொல்லப்படாத அரசியல் கருத்துக்களே இல்லை. ஆயினும் திருக்குறள் அந்த நூல்களுக்கும் மேலான அரசியல் கருத்துக்களைக் கொண்டிருப்பதை விண்டர்ஹீட்ஸ் என்னும் தக்க சான்றுகளைக்காட்டி நிறுவியுள்ளார். அவர்,

“அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்

எஞ்சாமை வேந்தர்க் கியல்பு” (குறள்.382)

என்னும் குறளில் ஏனைய அரசியல் நூல்களில் காண்பதற்கு அரிதான ஓர் அரசியல் தத்துவம் இருப்பதை விளக்கியுள்ளார். சாதாரணமாக ஒருவர் மனத்தில் ஒரு நேரத்தில் ஒரு குணம் மட்டுமே இருக்கும். இரண்டு மூன்று பண்புகள் இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஒரு குணத்தை அழித்தே மற்றொரு குணம் மேலோங்கும். அறிவு வேகத்தைக் கொண்ட மனம் அஞ்சாமை முதலிய பல குணங்களையும் அடுத்தடுத்து ஒவ்வொன்றையும் தடுத்து, ஒவ்வொன்றையும் விரைந்து நோக்குவதால் எப்பொழுதும் எல்லாக்குணங்களும் ஒரே சமயத்தில் தம் மனத்தில் இருப்பனபோலவே காட்டும். இவ்வாறு விரைவுத் தன்மையால் ஒரேசமயத்தில் இருப்பனபோல் தோன்றுகின்றனவே அன்றி உண்மையில் ஒரே சமயத்தில் நான்கு குணங்களும் இல்லை. இந்நான்கு குணங்களும் எப்பொழுதும் ஒரே சமயத்தில் நிலையானதாகத் தங்கியிருப்பதுதான் மன்னனின் குணவியல்பு என்பதை வள்ளுவம் இக்குறளில் நுணுக்கமாக வெளிப்படுத்துகின்றது.

பில்மர் என்னும் ஆங்கில அரசியல்வாதி (ஐரோப்பா) மன்னர்கள் தெய்வீக உரிமை படைத்தவர்கள் என்னும் கொள்கையை உறுதிசெய்து ஒரு நூலை எழுதியுள்ளார். ஆதாம் (யுனயஅ) என்னும் ஆதி மனிதனிடமிருந்து அரசியல் அதிகாரம் பிறந்தது. இந்த அதிகாரம் இறைவனால் ஆதாமுக்குக் கொடுக்கப்பட்டது. அன்றிலிருந்து தலைமுறை தலைறமுறையாக ஆதாமிடமிருந்து அரசியல் அதிகாரம் வந்து கொண்டிருக்கின்றது. இதனால் அரசியல் அதிகாரம் மன்னர் உரிமையும் தெய்வீகமானது என்பது பில்மரின் வாதமாகும். ஆனால் வள்ளுவம் முறைசெய்யாத, குற்றமுடைய மன்னர்களைப் பலவாறு கடிந்துள்ளது. கொடுங்கோல் மன்னவனைக் கொலையாளியைக் காட்டினும் கொடியவன் என்கின்றது. மற்றோரிடத்தில் கொள்ளைக் கூட்டத்தோடு இணைத்துப் பார்க்கின்றது.

மன்னவனால்தான் உலகில் கல்வி வளத்தைப் பெருக்க இயலும். இதனால்தான் வள்ளுவம் அரசியலில் கல்வியைப் பேசுகின்றது. மன்னவனும் குடிமக்களும் மனிதர்களே ஆதலால் வாழ்க்கையின் இயல்பை உணர்த்தும் துணைக்கருவியாகக் கல்வி விளங்கு கின்றது. ஆதலால் மன்னர், மக்கள் ஆகிய இருசாரர்க்கும் பொதுவானதாகவும், சிறப்புடைய பொருளாகவும் வள்ளுவம் கல்வியைப் பேசுகின்றது.

வள்ளுவம் மன்னராட்சிக் காலத்திலேயே தேர்தலைப் பற்றித் தெளிவுபட விளக்கியுள்ளது. தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் என்னும் இரண்டு அதிகாரங்கள்

தேர்தலுக்கென்ற அமைக்கப்பட்டுள்ளன. ஒருவனிடமுள்ள குணங்களையும் குற்றங்களையும் ஆராய்ந்து தலைவனாகவும் ஆட்சியாளனாகவும் தேர்வு செய்ய வேண்டும்.

“குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்

மிகைநாடி மிக்க கொளல்” (குறள்.504)

“தகுதிக்குத் தக்கவாறு செயலையும், அச்செயலைச் செய்வோரையும் நன்றாயறிந்து பின்னர் தேர்வு செய்க" (தி.சுப்பிரமணியதாஸ், வள்ளுவர் வகுத்த அரசியல், திருவள்ளுவர் கழகம், மதுரை, 1957, ப.76) என ஒரு நுட்பமான தேர்வுமுறையைத் திருவள்ளுவர் வலியுறுத்துவதாக தி.சுப்பிரமணியதாஸ் வலியுறுத்திக் கூறுகின்றார்.

## மன்னனின் பாதுகாவல் கவசங்கள்

மன்னனின் பாதுகாவல் கவசங்களாக அமைவன பல. அவற்றுள் முதன்மையானது அமைச்சு ஆகும். அமைச்சு என்பது மன்னர்களுக்கு அறிவுரை கூறி நல்லாற்றுப்படுத்தும் அமைச்சர்களைக் குறிக்கும். “அமைச்சன் மன்னனைவிட அறிவுள்ளவனாகவும், திறமை மிக்கவனாகவும் பேச்சில் வல்லவனாகவும் நேர்மையுடையவனாகவும் இருத்தல் வேண்டும். அமைச்சன் படை, பொருள், ஏற்றகாலம், செய்கை மற்றும் பிற முயற்சியால் பெரும்பயனளித்தல் ஆகிய இவற்றுடன் தொழிலாற்றுவதில் அசைவில்லாமை, குடிகாத்தல், நீதிநூல்களைக் கற்று அல்லன தவிர்த்தல், நல்லன அறிதல், தொடர் முயற்சி ஆகியன உடையவனாக இருத்தல் வேண்டும். இதற்குரிய கல்வியறிவும் மதிநுட்பமும் அமைச்சனுக்கு வேண்டும்" அமைச்சன் தகுதிகளும் செயற்பாடுகளும் வள்ளுவத்தில் வலியுறுத்தப் படுகின்றன. அரணைப் பற்றிப் பேசும் வள்ளுவம்,

“இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்

வல்லரணும் நாட்டிற் குறுப்பு” (குறள்.737)

என வலியுறுத்துகின்றது. அரணாவது முத்துப்போன்ற நிறத்தையுடைய வற்றாத நீரும் நீர்நிலையும் நிழலும் இல்லாத பாலை நிலமும், தொடர்ச்சியான இடமகன்ற மலையும், குளிர்ந்த நிழலைத் தரும்படியான இடமகன்ற மலையும், குளிர்ந்த நிழலைத் தருவதான மரங்கள் செறிந்த காடும் உடையதாக இருக்க வேண்டும் என்கின்றது.

மன்னனுக்கு முக்கியமான பாதுகாப்புக் கவசம் செய்பொருளாகும் பகைவரின் செறுக்கை அறுப்பது பொருளாதலின் வள்ளுவம் செய்க பொருளை என்கின்றது.

“செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்

எஃகதனில் கூரியது இல்” (குறள்.759)

மன்னனின் உறுப்புக்களுள் மிகவும் முக்கியமானது அவசியத் தேவையானது படையாகும். நாட்டின் பாதுகாப்பு படைவீரர்களின் வீரத்தைப் பொறுத்தே அமைகின்றது. அக்காலத்தில் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய நான்கு

வகைப்படைகள் இருந்தன. இவற்றைக் காட்டிலும் மன்னனது உயிர்ப் பாதுகாப்புக் கவசமாக மூலப்படை இருந்தது. இதில் மன்னனது உறவினர்களே இருந்தனர். வெல்லும் படையின் தன்மையைக் கூறும் வள்ளுவம்,

"சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை" (குறள்.769) என்கின்றது.

## தூதும் தூதுவர் செயலும்

தூது என்னும் அதிகாரத்தில் வள்ளுவம் தூது செல்வார் இயல்புகளைச் சிறப்பித்துப் பேசுகின்றது. தூதுவன், மன்னனின் பாதுகாப்புக் கவசங்களில் முதன்மையானவன் ஆவான். தூதுவனால், போரைத்தடுத்து நாட்டின் பொது அமைதியைப் பாதுகாக்க இயலும். தூதுவன் அமைச்சர் நிலையில் இருப்பவன் தூதுவர்களை அமைச்சர்களுக்கு இணையானவர்களாக வள்ளுவம் கருதுகின்றது. தூதுவர்கள் வகுத்துக் கூறுபவர்கள், கூறியதைக் கூறுபவர்கள் என இருவகையினராக உள்ளனர். வகுத்துக் கூறுபவன் என்பவன் ஒரு செயலைத்தான் பிறர்க்குச் சொல்லும் வகையையும், அதற்கு அவர்கூறும் பதிலையும், அப்பதிலுரைக்குத்தான் மறுமொழி சொல்லும் வகையையும், மேலும் மேலும் தானே கற்பித்துக்கொண்டு இடத்திற்கும் காலத்திற்கும் சூழலுக்குத் தக்கவாறு பேசும் சாதுர்யமான தூதுவன் ஆவான். கூறியதைக் கூறும் தூதுவன் என்பவன் தன் மன்னன் கூறியதை மட்டும் அப்படியே பகைமன்னனிடம் கூறும் தூதுவன் ஆவான். வள்ளுவம் வகுத்துக்கூறும் தூதுவர்களே சிறந்தவர்கள் எனச் சிறப்பித்துப் பேசுகின்றது. இத்தூதுவர்களை வள்ளுவம் தூதுரைப்பான், வினையுரைப்பான், தக்கதறிவான், கற்றுக்கண் அஞ்சான், எண்ணி உரைப்பான், வாய்மை வழியுரைப்பான், வாய்சோரா வன்கணவன் எனப் பலவாறு சிறப்பித்துப் பேசுகின்றது.

"நூலாருள் நூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு" குறள்.683)

"கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாம் தூது" (குறள்.686)
"கடனறிந்து காலம் கருதி இடனறிந்
தெண்ணி உரைப்பான் தலை" (குறள்.687)

"இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாம் தூது" (குறள்.690)

என்னும் குறட்பாக்களால் தூதுவன், மன்னனுக்கு முக்கியக்கவசம் என்பதை அறியலாம்.

## ஒற்றனும் ஒற்றாடலும்

இக்காலத்தில் மத்திய, மாநில அரசுகளின் புலனாய்வுத்துறை செயல்படுவதைப் போல மன்னராட்சிக்காலத்தில் ஒற்றர்கள் செயல்பட்டுள்ளனர். இந்த ஒற்றாடல் துறையில் பணியாற்றிய ஒற்றர்கள் நாட்டின் நிகழ்வுகளையும் நடப்புக்களையும் அவ்வப்போது உளவு கண்டு மன்னனைப் பாதுகாத்ததோடு, ஆட்சிப் பாதுகாப்பிற்கும் நாட்டின் பாதுகாப்பிற்கும் உறுதுணையாக இருந்துள்ளனர். மறைவாகப் பிறர் செய்தவற்றைக் கேட்டறியும் திறனுடையவராகவும், அவ்வாறு அறிந்தவற்றை ஐயமில்லாமல் தெளிவு செய்து கொள்பவராகவும் அமைபவர்களே ஒற்றர்கள் ஆவர்.

"மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை

ஐயப்பா டில்லதே ஒற்று" (குறள்.587)

மன்னவன், ஓர் ஒற்றனை மற்றோர் ஒற்றன் அறியாதவாறு ஒற்றர்களை இயக்குதல் வேண்டும். அத்தகைய ஒற்றர்கள் மூவர் கூறும் செய்திகள் ஒன்றுபோல் இருக்குமேயானால், அதனை ஏற்க வேண்டும்.

"ஒற்றொற் றுணராமை ஆள்க உடன்மூவர்

சொற்றொக்க தேறப் படும்" (குறள்.589)

இவ்வாறு ஒற்றர்கள் உளவறிந்து கூறிய செய்தியையும், மற்றுமோர் ஒற்றனால் உளவறிந்து மன்னவன் தெளிதல் வேண்டும் என்பதே வள்ளுவம் வலியுறுத்தும் உளவுத்துறையின் நுட்பமாகும்.

"ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்

ஒற்றினால் ஒற்றிக் கொளல்" (குறள்.588)

ஏனெனில் உளவுத் துறையின் தகவலால் அரசாட்சிக்கு மோசமான பின்விளைவுகள் ஏற்படக்கூடும். இதனைத் தெரிந்து தெளிதல் ஆட்சியாளனாகிய மன்னவன் கடமை என்பதை வள்ளுவம்,

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்

தீரா இடும்பை தரும்" (குறள்.510)

என வலியுறுத்துகின்றது. இதனால்தான் தலைசிறந்த அரசியல் பொருள்நூலாக வள்ளுவம் ஆய்வாளர்களால் ஏற்கப்பட்டுள்ளது.

தக்கனவற்றைக் கேட்டறியும் கேள்விஞானம், உலகம் தழீஇய ஒட்பத்தை அறியும் அறிவுடைமை, மெய்ப்பொருளும் நுண்பொருளும் காணும் நுணுக்கம், தன்குற்றம் நீக்கும் குற்றங்கடிதல், உற்றநோய் நீக்கும் பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினம் சேராதிருத்தல், ஆராய்ந்து செயலாற்றும் தெரிந்து செயல்வகை, வலியறிதல் (வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்), செயலுக்கேற்ற காலம் அறிதல், இடனறிதல், தக்காரைத் தெரிந்து

தெளிதல், வெருவந்த செய்யாமை (அஞ்சத்தக்க செயல்களைச் செய்யாமை), மடியின்மை, ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை (முயற்சி), இடுக்கண் அழியாமை என வள்ளுவம் மன்னனுக்கு ஆட்சியை முறைப்படுத்தவும் நெறிப்படுத்தவும் வகுத்துள்ள அரசியல் நெறிகள் எக்காலத்திற்கும் ஏற்புடையதாகும்.

## அறந்தழீஇய அரசியல்

வள்ளுவத்திற்குமுன் உலகநாடுகளிலும் இந்திய நாட்டளவிலும் பல அரசியல், சமூக, பொருளாதார நூல்கள் தோன்றியிருப்பினும் வள்ளுவத்தைப் போன்று அறம்தழீஇய அரசியலை அந்நூல்கள் கூறவில்லை. இக்கருத்தினைக் குன்றக்குடி அடிகளார், "திருக்குறள் போன்று பிறநூல்கள் அறந்தழீஇய அரசியலைச் சொல்லவில்லை என்பது அறிந்தோர் கூறும் உண்மை. சாணக்கியரின் அர்த்தசாஸ்திரமும் பிளேட்டோவின் குடியரசும் மன்னனின் ஆதிபத்தியத்தை அரண் செய்வன. ஆனால் திருக்குறள் மட்டுமே மனித உரிமைகளையும் மக்கட் சமுதாயநலன்களையும் காத்து நிற்பது" என்பார். ஆகமொத்தம் அறம்கூறும் அரசியல் நூல் என்ற நோக்கில் உலக அளவில் வள்ளுவத்திற்கு நிகராக வேறுநூல்கள் எவையும் இல்லை என்ற உண்மை மிகையின்றித் தெளிவாகின்றது.

மக்கள் கூட்டமாகக் கூடி வாழமுற்பட்டதாலும், உற்பத்திகள் தொடங்கப்பெற்றுத் தனியார் சொத்துக்கள் பெருகி வளர்ந்தாலும், சொத்துக்களின் அடிப்படையில் மோதல் ஏற்பட்டு தனியாரின் உடைமைகளைப் பாதுகாக்க அரசாங்கத்தை அமைத்தனர் போலும். முதல் அரசு, சொத்துடைமை வர்க்கம் ஏற்படுத்திய அரசே ஆகும். ஆயினும் இன்றுவரை அரசுகள் சொத்துடைமை வர்க்கத்திற்குப் பாதுகாப்பாகவே இயங்கி வருகின்றன. வள்ளுவம் மக்கள் நலம் கருதிய நல்லரசைச் செங்கோல் அரசு என்றும், நலம் செய்யாத அரசைக் கொடுங்கோல் அரசு என்றும் பாகுபாடு செய்துள்ளது.

வள்ளுவத்தின் வழி நோக்கும்போது அரசியல் என்பது ஒரு வாழ்வியல் தத்துவம், கொள்கை, கோட்பாடு என்றாகின்றது. அறவே வள்ளுவ அரசியலுக்கு ஆதாரமாகும். வள்ளுவம் அரசியலை முறையாக விளக்குகின்றது. மனிதகுலப் பொருளியல் ஒழுக்கமுறைகளை முறைப்படுத்தி வளம், வறுமை என்னும் வேறுபாடுகளை நீக்கி, பொருளின் காரணமாகத் தோன்றும் ஒழுக்கச் சிதைவுகளை அகற்றி, நிறைவான ஒரு சமுதாயத்தைப் படைக்கத் தோன்றும் அரசியலுக்குப் பொருளியலே அடிப்படை. அதனால் திருக்குறள் பொருட்பாலில் அரசியலைப் பேசுகின்றது.

அரசியலை முறையாக அறிந்துவளர்ந்த மனிதர்களே அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்க முடியும். மனிதகுலம் நன்னிலையைப் பெற முடியும். மனிதகுல வரலாறு தொடங்கிய காலம் முதல் அரசில்லாமல் நாடுகள் இருந்ததில்லை. தமிழகத்தில் முடிமன்னராட்சி போற்றுதலுக்குரியதாக இருந்தது அது இங்கிலாந்து, பிரான்சு நாட்டு மன்னர்களின் ஆட்சியைப் போல விழுமியது உலக வரலாற்றில் நல்ல முடியாட்சியாக விளங்கிய தமிழ்நாட்டில் தோன்றிய திருவள்ளுவர் அறத்தொடு கூடிய முடியாட்சியையே

ஏற்றுக் கொள்கின்றனர். மக்கள் அரசைத் தழுவி வாழும் நெறி சிறந்த அரசியல் நெறியாகாது. மக்கள் அரசைத் தழுவி வாழ்ந்தால்தான் வாழ்வு கிடைக்கும் என்றால் அது கொடுங்கோலரசு. குடிமக்களைத் தழுவி நிற்கும் அரசில்தான் மக்கள் உரிமையுடன் வாழ்வார்கள் என்பது வள்ளுவத்தின் வழிப்பட்ட அரசியலாகும்.

அரசாட்சியின் நடைமுறைகளை விமர்சனம் செய்ய வள்ளுவம் உரிமை வழங்குகின்றது. மன்னன் மற்றும் ஆட்சியாளர் தவறுகளைக் கடிந்துகூறும் அமைச்சர்கள் இல்லையெனில் அந்த அரசு பகைவரின்றியே அழியும் என்பதை வள்ளுவம்,

“இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்" (குறள்.448)

என எச்சரிக்கின்றது. இங்ஙனம் இடித்துரைப்பது மன்னன் செவிக்குக் கைப்பாக இருக்கலாம். ஆயினும் மன்னவன் அதனைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்பது வள்ளுவம் கண்ட அரசியல் முடிவாகும்.

“செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு” (குறள்.389)

என்கிறது வள்ளுவம். ஏன்? முறையாக நடைபெறாத ஆட்சியை மாற்றலாம்: மாற்றமுடியும் மன்னர்கள் ஆட்சியை இழப்பர் என வள்ளுவம் ஆட்சி மாற்றத்திற்கான உரிமையையும் வழங்குகிறது.

“கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு” (குறள்.554)

என வள்ளுவம் காட்டும் அரசு குடியாட்சி தழுவிய முடியாட்சியாகும்.

வள்ளுவம் கண்ட அரசு பல கூறுகளில் தற்கால இலட்சிய ஆட்சி இயலை ஒத்திருந்தாலும் சில முக்கியமான அடிப்படைக் கொள்கைகளில் வேறுபடுகின்றது. மேலைநாட்டு ஆட்சியியல் நிபுணர்கள், அண்டைநாடுகளைப் பகை நாடுகளாக்கியே அரசியல் திட்டங்களை வகுத்துள்ளனர். வள்ளுவம் நாடுகளுக்கிடையே பகையே கூடாது எனப் பேசுகின்றது. தற்காலத்தில் முக்கியத்துவத்துடன் போற்றப்படும் அண்டை நாடுகளுடன் நல்லுறவு என்ற கொள்கையில் வள்ளுவ அரசு அமைகின்றது. பல அரச நீதிநூல்கள் மன்னனுக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளன. வள்ளுவம் குடிதழீஇக் கோலாச்ச வேண்டுமெனக் கொள்கை வகுத்துள்ளது.

“குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு” குறள்.544)

வள்ளுவத்தின் காலம் முடியாட்சிக் காலமெனினும், அதில் குடிகளின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டுள்ளது. மன்னர் பதவி, பரம்பரை உரிமை என்ற கருத்து வள்ளுவத்தில் இல்லை. வள்ளுவத்தின் நாடு பற்றிய சிந்தனை, தன்னிறைவு கொண்ட மக்கள் நலச் சமுதாயமாகும்.

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளம்தரும் நாடு" (குறள்.739)

சட்டமும் நீதிமன்றமும் தண்டனைகளும் குற்றவாளிகளைத் திருத்தவே அழிக்க அன்று என்னும் தற்காலச் சிந்தனையை வள்ளுவம்,

"கடிதோச்சி மெல்ல எறிக, நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்" (குறள்.562)

எனக் கூறுகின்றது. வள்ளுவம் "சாம்ராச்சியம்" என்னும் பேரரசுக் கொள்கையில் செல்லவில்லை. சாம்ராச்சிய ஆசையால் போர் என்ற குறிப்பு வள்ளுவத்தில் இல்லை. படையாட்சி யை வள்ளுவம் பேசினாலும், அதனைத் தற்காப்புப்படைமை என்றே சிந்திக்க வேண்டியுள்ளது. வள்ளுவம் நல்லவர் ஆட்சியை வல்லவர் வீழ்த்திடும் நச்சு மனப்பான்மை யைக் கருதியே பாதுகாப்புப்படை அவசியம் என்கின்றது.

அண்டை நாட்டில் கொடுங்கோலாட்சி நடந்தால் அந்நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டு மக்களுக்கு நல்லாட்சியை வழங்க வேண்டும் என்பதை வள்ளுவம்,

"வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேகப் பகை" (குறள்.861)

என வலியுறுத்துகின்றது. மன்னவன் பொருள் சேர்க்கும் நெறிமுறை மன்னவன் நாட்டில் வருவாயைப் பெருக்கும் முறையை வள்ளுவம்,

"உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்" (குறள்.756)

என வலியுறுத்துகின்றது. அரசுரிமையால் வந்தடையும் பொருள் (உறுபொருள்), வரி வசூலால் வந்தடையும் பொருள் (உல்குபொருள்), தன் பகைவரை அழித்து மன்னவன் பெறும் பொருள் (ஒன்னார்த் தெறுபொருள்) ஆகியனவே மன்னவன் நாட்டின் ஆட்சிக்குச் சேர்க்கும் பொருளாகும். மன்னவன் செங்கோலாட்சிக்கு சான்றளிப்பது அவன் குடிமக்களிடம் வரிகொள்ளும் முறையே. மன்னவன் குடிமக்களிடம் மனம் வருந்த வரி கொள்ளக்கூடாது. "அழக்கொண்ட எல்லாம் அழப்போம்" என்பதே வள்ளுவம் குடிமக்களிடம் வரிகொள்ளும் முறைக்கு வகுத்த நெறியாகும்.

"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்" (குறள்.546)

"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்" (குறள்.547)

"இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு" (குறள்.545)

மன்னவன் கோல்நோக்கி வாழும் குடி ஆதலால், மக்களைத் துன்புறுத்தி மன்னன் வரிகொள்ளக்கூடாது என்பதே வள்ளுவம் வகுத்த செங்கோல் நெறியாகும்.

## முடிவுரை

மன்னன் - தலைவன், மன்னனுக்குக் கல்வி வேண்டும், மக்கள் தொடர்பில் சொல்லாற்றலும் பேச்சு வன்மையும், உடையவனாக இருக்கவேண்டும் மன்னன் கடவுள் இல்லை, பொருட்பாலில் வள்ளுவம் கூறும் அரசியல், நாடு என்னும் நிலப்பரப்பு, அரசியலின் கொள்கைகளும் போக்குகளும், மன்னனின் பண்புகளும் பணிகளும், அரசுப் பணியாளர்களைத் தேர்வு செய்தல், அரசின் நிர்வாகக் கொள்கை, வள்ளுவ அரசியலின் தனித்தன்மைகள், வள்ளுவம் கண்ட நாடு, கோனாட்சியில் குடியாட்சி கண்ட வள்ளுவம், மன்னனின் பாதுகாவல் கவசங்கள், தூதும் தூதுவர் செயலும், ஒற்றனும் ஒற்றாடலும், அறந்தழீஇய அரசியல், மன்னவன் பொருள் சேர்க்கும் நெறிமுறை என்னும் பகுப்பு நிலைகளில் வள்ளுவம் வலியுறுத்தும் அரசியல் சிந்தனைகள் இவ்ஆய்வுக் கட்டுரையில் ஆராயப் பெற்றுள்ளன. அறம் தழுவிய அரசியல் என்ற வள்ளுவக் கொள்கையில் அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் காணப்பெறும் அரசியல் சிந்தனைகள் மக்கள் நலவாழ்வு என்னும் நோக்கு நிலையில் எக்காலத்துக்கும் ஏற்புடையதாகும்.

## References

Alalasundaram, (1969) Politics and Literature, kalap Pathipagam, Chennai, India.

Annamalai, M., (1961) Uniqueness of Valluvar, Tholkappiyar Library, Chennai, India.

Chakravarthy Nayenar, (1947) Tirukkurum and Equal Dharma, Mutamil Nilayam, Chennai, India.

Kembu Arumugam, (1969) Thirukural and Bhagavad Gita, Chennai, India.

Kundrakudi adigalar, (1972) The politics of Tirukkural, Kalaivani Puttakalayam, Chennai, India.

Mohanarasu, K., (2007) Periodical Studies on Tirukkural, Manivasagar Pathipagam, Chennai, India.

Murugarathinam, T., (1975) Economics devised by Valluvar, Madurai Kamaraj University, India.

Pakirisankar, P.R., (1973) Valluvar's Law and Justice - The politics that Valluvar saw, Madurai Kamaraj University, India.

Paloore Kannapa Mudaliar, (1956) Politics that seen by Valluvar, Central Press, Chennai, India.

Paramasivananatham, (1969), Principles of life evolved by Valluvar, Tamilkalai Pathipagam, Chennai, India.

Perumal, C.A., (1974) The political clarity of Tirukkural, Madurai Kamaraj University, India.

Rajaram, M., (2009) Thirukkural: Pearls of Inspiration (1st ed.). New Delhi: Rupa Publications.

Rajaram, M., (2015) Glory of Thirukkural. 915 (1st ed.). Chennai: International Institute of Tamil Studies.

Ramashanmugam, R., (1971) Government and politics devised by Valluvar, Madurai Kamaraj University, Fifth Symposium Review, India.

Srinivasan, V., (1964) The good life that Valluvar has seen, Bharathi Book Station, Madurai, India.

Subramaniyadass, T., (1957) Politics that evolved by Valluvar, Thiruvalluvar Corporation, Madurai, India.

Venkataramaiah, C.M., (1970) Valluvar Mind, Valluvar Corporation, Thenkasi, India.

Viswanatham, K.A.P., (1954) Valluvar and Thirukural, Parinilayam, Chennai, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License